<u>குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்.</u>

முன்னிலை : செல்வி. என். ஷர்மிளா, B.A.,B.L.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

2015 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 30 ஆம் நாள் புதன்கிழமை
திருவள்ளுவராண்டு 2046, ஸ்ரீ மன்மத வருடம், மார்கழி 14 ஆம் நாள்

<u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். **186/2013**</u>

காவல் ஆய்வாளர்,
(அனைத்து மகளிர் காவல் நிலையம் (கிழக்கு),
கோயம்புத்தூர்.
(குற்ற எண்.12/09) ... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1. ஜெகதீஸ் (33) த/பெ. முத்துசாமி s
2. முத்துசாமி (68) த/பெ. பழனிச்சாமி
3. விஜயலெட்சுமி (55) க/பெ. முத்துசாமி ... எதிரிகள்

இவ்வழக்கானது இறுதி விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன் வரப்பெற்று, அரசுத்தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திரு.சு. சிவக்குமார் எம்.எஸ்சி.,எம்.எல்., அவர்களும், எதிரிகள் தரப்பில் திரு.சி. முருகேசன், பி.எஸ்சி.,பி.எல்., அவர்களும் முன்னிலையாகி எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களைப் பரிசீலித்தும் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்

WEB COPY

<u>தீர்ப்புரை</u>

1. இந்த வழக்கானது காவல்துறையினர் எதிரிகள்மீது இதச பிரிவு 498(A)-ன் கீழ் குற்றம் புரிந்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கின் வாதி கிருத்திகாவிற்கும் 1-ம் எதிரிக்கும் 12.02.2008-ம்தேதி அவினாசிரோடு கோல்டுவின்ஸில் உள்ள ராமலெட்சுமி மஹாலில் வைத்து இந்து முறைப்படி திருமணம் நடைபெற்றதாகவும், திருமணத்திற்கு வாதியின் பெற்றோர் 150 பவுன் நகையும் ரூ.14 லட்சம் செலவு செய்து திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்கு பின்னிட்டு புகார்தாரர் கூட்டுக் குடும்பமாக ஒருவார காலம் வாழ்ந்தபோது 2, 3 எதிரிகள் புகார்தாரரை 1-வது எதிரியுடன் பேச விடாமல் அவ்வாறு பேச வேண்டுமென்றால் 2 வது மற்றும் 3 வது எதிரிகளிடம் அனுமதி வாங்க வேண்டுமெனவும், அமெரிக்கா சென்று 1-வது எதிரியுடன் குடும்பம் நடத்த வேண்டுமென்றால் 4000 அமெரிக்க டாலர் கொடுக்க வேண்டுமென்றும், கொடுக்க மறுத்தால் கணவருடன் வாழ முடியாது என்று எதிரிகள் மூவரும் அச்சுறுத்தியதாகவும், எதிரி கிருத்திகா 24.05.2008 ஆம்தேதி நியூயார்க் சென்ற பிறகும் தான் கேட்ட 4000 அமெரிக்க டாலர் வேண்டுமென்றும், வீட்டிற்கு தேவையான அனைத்து சாமான்களையும் சாட்சி1 தான் வாங்கவேண்டுமென்று சொல்லி எதிரி கொடுமைப்படுத்தியதாகவும், பிறகு நியூயார்க்கில் இருந்தபோது 11.06.2008 அன்று 1-வது எதிரி சாட்சி கிருத்திகாவின் கையை கத்தியால் அறுத்துவிட்டு இந்தியாவிற்கு திரும்ப செல்லும்படி விரட்டிவிட்டு 2 வது மற்றும் 3 வது எதிரிகள் 1-வது எதிரியை தூண்டிவிட்டு 1 வது எதிரி கேட்டதை கொடுக்காவிட்டால் சாட்சி கிருத்திகாவை தூக்கி எறிந்து விடுவான் என்று கூறியதாகவும், 20.11.2008-ஆம் தேதி 1-வது எதிரி வீட்டைவிட்டு கிருத்திகாவை விரட்டி உடல் தியாகவும் மனரீதியாகவும் கொடுமைப்படுத்தியதாக எதிரிகளின்மீது இதச பிரிவு 498(A)-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அவருக்கு அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207-ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்பு வழக்காவணங்களை பரிசீலித்து எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை புரிந்திருக்கலாம் என அனுமானிக்க போதுமான காரணங்கள் இருந்ததன்பேரில் எதிரிகள்மீது இதச பிரிவு 498(A)-ன்கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ, எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் அல்ல என்றார். எனவே அரசுத்தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசுத்தரப்பில் 10 சாட்சிகளும் 10 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன.

**<u>5.</u>** <u>அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணையின் சுருக்கம் பின்வருமாறு</u>**:**

அசா.1 கிருத்திகா தனது சாட்சியத்தில் தான் சாய்பாபா காலணியில் பெற்றோர் வீட்டில் குடியிருப்பதாகவும், தனக்கும் 1-ம் எதிரிக்கும் 18.02.2008-ல் ராமலட்சுமி மஹாலில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின்போது 1-ம் எதிரி U.S.A-ல் கான்ட்ராக்டராக வேலை பார்த்து வந்ததாகவும், தான் பெங்களூரில் வேலை செய்து வந்ததாகவும், திருமணத்திற்கு தனக்கு 150 பவுன் நகை போட்டதாகவும், திருமணத்திற்கு பிறகு தாங்கள் 2 நாட்கள் தங்கள் வீட்டில் தங்கியிருந்ததாகவும், அதன்பின் ஒருநாள் கோயிலுக்கு போய்விட்டு என் மாமியார் வீட்டுக்கு போனபோது எதிரிகள் தனித்தனியாக ஒவ்வொரு அறையில் இருந்தபோது யாரும் தன்னிடம் பேச வரவில்லை என்றும், 1-ம் எதிரி அவர் அப்பாவிடம் நீண்டநேரம் பேசிவிட்டு பின் தன்னிடம் வந்து ‘தன் அப்பா கல்யாணத்தை சரியாக நடத்தவில்லை என்று சொல்லி கோபப்படுவதாகவும், திருமணத்தின்போது தன் அப்பா நகைகள் மட்டும் போட்டுவிட்டு ரொக்கமாக பணம் தரவில்லை என்று சொன்னதாகவும், 1-ம் எதிரியின் சகோதரி குழந்தை ஆஸ்திரேலியாவில் பிறந்ததால் கோவையிலுள்ள கல்யாண மண்டபத்தில் வைத்து மொட்டையடிக்கும் விழாவை விமர்சையாக கொண்டாட வேண்டும் என்று சொன்னதாகவும், பின் 10.03.2008-ம் தேதி தான் திரும்பவும் பெங்களூரில் வேலைக்கு போய் சேர்ந்ததாகவும், வாரவிடுமுறையில் கோவை வந்தபோது தன் பெற்றோர் வீட்டிற்கும் எதிரிகளின் வீட்டிற்கும் போய் வருவதாகவும், அவ்வாறு ஒருநாள் எதிரிகளின் வீட்டிற்கு சென்றபோது தன் மாமனார் தன்னைப் பார்த்து கல்யாணம் ஒழுங்கா பண்ணவில்லை என்று தன் பங்காளிகள் கிண்டல் செய்வதாகவும் தனக்கு அவமானமாய் இருப்பதாகவும் சொன்னதாகவும், தான் போலீசார் விசாரணையில் சொன்ன விசயங்கள் அனைத்தையும் சொன்னதாகவும், தனக்கு தமிழ் படிக்க தெரியாது என்பதால் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று தெரியாது என்றும், தான் கண் அறுவை சிகிச்சை செய்வதற்காக மருத்துவமனையில் இருந்தபோது 2,3 எதிரிகள் தன்னை பார்க்க வந்ததாகவும், 1-ம் எதிரி அமெரிக்கா சென்றபிறகு தன்னுடைய நகைகளை தன் மாமியாரிடம் கொடுக்கும்படி கூறியதால் ஒரு டப்பாவில் வைத்து கொடுத்ததாகவும், அதன்பின் தனக்கு விசா கிடைத்து தான்அமெரிக்கா சென்றபோது அங்கு வைத்து 1-ம் எதிரி தன்னை கொடுமைப்படுத்தியதாகவும், அங்கிருக்கும்போது இரவு நேரத்தில் பார்த்தால் இருக்கமாட்டார் என்றும், வீட்டை வெளியில் பூட்டிவிட்டு மறுநாள் காலை 6.00 மணிக்கு தான் வருவார் என்றும் இதுகுறித்து தான் கேட்டதற்கு நீயே வெறுங்கையுடன் வந்திருக்கிறாய் தன்னை கேள்வி கேட்பதற்கு உனக்கு உரிமையில்லை என்று கூறியதாகவும், மேலும் திருமணநாள் வந்தபோது தொலைபேசி மூலம் வாழ்த்து சொல்ல போகிறேன் என்று சொன்னபோது 1-ம் எதிரி கையில் வைத்திருந்த பேப்பர் வெட்டும் கத்தியால் தன் கையை கிழித்து விட்டு இதுதான் உன் பெற்றோருக்கு தான் கொடுக்கும் வாழ்த்து என்று சொல் என்று சொன்னதாகவும், தான் தூங்கிக் கொண்டிருந்தால் இவ்வளவு பிரச்சனைகளுக்கிடையில் உனக்கு தூக்கமா என்று கையில் வைத்திருந்த மதுபாட்டிலை தூக்கி வீசுவதாகவும், பின் நடந்த விவரங்களை கோவையில் துரைசாமி என்ற ஓய்வு பெற்ற ஏடிஎஸ்பி ஆகஇருந்த அவரிடம் சொன்னபோது எதிரிகள் ஏன்அவரிடம் சொன்னீர்கள் என்று தன்னிடம் கேட்டதாகவும், 1-ம்எதிரி செய்யும் கொடுமைகளை பொருத்துக்கொண்டு தான் இருந்ததாகவும், இதனால் மனஉளைச்சல் ஏற்பட்டு ரயிலில் பயணம் செய்யும்போது தான் மயங்கி கீழே விழுந்தவுடன் தன்கணவருக்கு போன் செய்தபோது நீ தானே விழுந்தாய்நீயே மருத்துவமனை போய் சிகிச்சை பெற்றுக்கொள் என்று கூறியதாகவும், தான் வீட்டு செலவு போக 1000 டாலர் கொடுக்கவேண்டும் இல்லாவிட்டால் இப்படித்தான் செய்வோம் என்று கூறியதாகவும், பின் தன்மாமியார் 6 மாதத்திற்கு 1-ம்எதிரியுடன் இருக்கக்கூடாது என்று கூறியதாகவும், மேலும் 20.11.08-ம்தேதி தான் வீட்டில் சமைத்துக் கொண்டிருந்தபோது 1-ம் எதிரி வந்து எது வீட்டில் நடந்தாலும் தன்அப்பாவிற்கு போன் செய்து விடுகிறாய், பணம் கேட்டாலும் கொடுப்பதில்லை என்று 1-ம்எதிரி கழுத்தைப்பிடித்து வெளியில் தள்ளியதாகவும், தன்னிடம் ஒரு கேண்ட்பேக் மட்டும் இருந்ததாகவும், 4 நாட்கள் தான் ஹோட்டலில் தங்கியதாகவும், இனிமேல் தான் பார்த்துக்கொள்கிறேன் என்று 1-ம்எதிரி தன்அப்பாவிற்கு போன் செய்ததால் 25.11.08-ம் தேதி எதிரியின் வீட்டிற்கு சென்றபோது 2500 டாலருக்கான காசோலையை 1-ம்எதிரி எழுதி வாங்கியதாகவும், பின்

WEB COPY

2.12.08-ம்தேதி தன்னுடைய லேப்டாப்பை வாங்கிக்கொண்டு அவருடைய லேப்டாப்பை கொடுத்தபோது தான்அதை திறந்து பார்த்தபோது ஆபாசமான தன்னுடைய படங்கள் இருந்ததாகவும், இதுகுறித்து தான் கேட்டபோது இதுமட்டும் பார்த்தாயா வேறு எதையும் பார்த்தாயா என்று தன்னை எட்டி உதைத்து கால்கடியில் போட்டு தன்னை உதைத்ததாகவும், பின் அதிகாலை 2 மணிக்கு அமெரிக்காவிலுள்ள எண்.91 க்கு போன் செய்தபோது தனக்கு ஏற்பட்ட காயங்களை பார்த்துவிட்டு தன் கணவர் வீட்டுக்கு வரக்கூடாது என்றுஉத்தரவை பிறப்பித்ததாகவும், பின் தான் வேலைசெய்யும்நிறுவனத்தின் மேலாளர் தன்னை பார்த்துக் கொண்டதாகவும், பின் இந்தியாவிற்கு வந்து 15 நாட்கள் சிகிச்சை பெற்றதாகவும், பின் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், அது அ.த.சா.ஆ.1 என்றும், தான் அமெரிக்காவில் இருந்தபோது 911 என்ற அவசர உதவி எண்ணுக்கு அழைத்தபோது கொடுக்கப்பட்ட ரசீது அ.த.சா.ஆ.2 என்றும், அதன்பின் தான் மனுதாக்கல் செய்து தனக்கு USA WOOD BRIDGE MUNICIPAL COURT-ல் கொடுத்த உத்தரவு நகல் அ.த.சா.ஆ.3 என்றும், தான் ஹோட்டலில் 4 நாட்கள் தங்கியிருந்தபோது கொடுத்த ரசீது அத.சா.ஆ.4 என்றும், பின்பு 6.1.09-ம் தேதி Fax மூலமாக Jercy Court-க்கு அனுப்பிய கடிதம் அ.த.சா.ஆ.5 என்றும், வங்கி கணக்கு சம்பந்தப்பட்ட காசோலையின் கார்பன் நகல் அ.த.சா.ஆ.6 என்றும், வங்கிக் கணக்கில் 25.11.2008 முதல் 11.12.2008 வரையான கணக்குப் பட்டியல் அ.த.சா.ஆ.7 என்றும், அசல் பாஸ்போர்ட்டுடன் ஒளிநகல் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. அது அத.சா.ஆ.8 என்றும், தான் அமெரிக்காவில் இருந்தபோது தனக்கு கிடைத்த கடிதம் அ.த.சா.ஆ.9 என்றும், போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

6. அசா.2 துரைசாமி தனது சாட்சியத்தில் தான் கோயம்புத்தூரில் வசித்து வருவதாகவும், அசா.1 தன்மகள் என்றும், அசா.1 க்கும் 1-ம்எதிரிக்கும் 18.02.08-ம்தேதி பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் நடந்ததாகவும், 10.03.08-ம்தேதி 1-ம்எதிரி அமெரிக்கா சென்றதாகவும், அதன்பின் அசா.1 க்கு கண்ணில் ஒரலேசர் சிகிச்சை செய்ததால் 2,3 எதிரிகள் வந்தபோது 1-ம் எதிரியின் நகையை அமெரிக்கா வரும்போது வாங்கிக்கொண்டு வர சொன்னதாகவும், பின்அசா.1 அழுதுகொண்டு வந்ததை பார்த்து 2-ம்எதிரியிடம் என்ன நடந்தது என்றுதான் கேட்க சொன்னதாகவும், 2 நாள் கழித்து எல்லாம் சரியாகிவிட்டது என்று போன் செய்ததால் தானும் விட்டு விட்டதாகவும், பின் அசா.1 அவள் வேலை செய்த கம்பெனி மூலம் அமெரிக்கா செல்ல விசா வந்தபோது தன்னுடைய நகைகளை 1-ம்எதிரி மாமியாரிடம் கொடுக்க வேண்டுமென்று கூறியதால் கொடுத்ததாகவும், பின் அங்கு சென்று போனில் தன்மகள் பேசும்போது வெப் கேமராவில் வரும்படி சொன்னதாகவும், அதற்கு 1-ம்எதிரி வெப்கேமராவை கழற்றிபோட்டதாக சொன்னதாகவும், தனக்கு தெரிந்தவர்கள் அங்கு பக்கத்தில் இருக்கும்போது அங்கு செல்லக்கூடாது என்று கூறியதாகவும், 12.6.08-ம்தேதி தங்களுக்கு திருமணநாள் வந்தபோது அசா.1 யை எதிரி கத்தியால் கிழித்து விட்டதாக போன்செய்ததாகவும், அதை 3-ம்எதிரியிடம் சொல்ல போன் செய்தபோது 3 வது எதிரி போனை எடுக்கவில்லை என்றும், பின் 1-ம்எதிரி மது அருந்துவதை தங்களிடம் சொல்லக்கூடாது என்று சொல்லியதாகவும், அசா.1 வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்கி வந்து சமைத்து வைத்துவிட்டு குளித்துவிட்டு வருவதற்குள் 1-ம்எதிரி அனைத்தையும் சாப்பிட்டு விடுவதாக தன்னிடம் சொன்னதாகவும், அதன்பின்1-ம் எதிரிக்கு சொந்தமான லேப்டாப்பில்ஆபாசமான படங்கள் இருந்ததை பார்த்து கேட்டதால் அசா.1 யை எதிரி அடித்ததாகவும், பின் மேனேஜரின் உதவியுடன் கோவை வந்ததாகவும், அவர்கள் கேட்டபணத்தை கொடுத்திருந்தால் இதுபோல சம்பவம் நடந்திருக்காது என்று கூறியதாகவும், பின் 22.01.09 அன்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்து போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அசா.3 கலைச்செல்வி தனது சாட்சியத்தில் தான் என்.ஜி.ஜி.ஓ காலணியில் கோவையில் குடியிருந்து வருவதாகவும், அசா.1 தன்மகள் என்றும், 18.02.2008-ம் தேதி அசா.1 க்கும் எதிரிக்கும் பீளமேடு ராமலட்சுமி மஹாலில் வைத்து திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்கு 150 சவரன்நகை, அடுக்கு மாடி குடியிருப்பு வீடு மற்றும்14 முதல் 15 லட்சம் செலவு செய்து திருமணம் நடந்ததாகவும், திருமணமாகி 10 நாளில் பிரச்சனை ஏற்பட்டது என்றும், வரதட்சணையாக தாங்கள் எதுவும் கொடுக்கவில்லை. நகையை மாமனார் மாமியாரிடம் கொடுக்க வேண்டுமென்றதால் தாங்களும் ஒப்புக் கொண்டதாகவும், பணத்தை வைத்து தான் அவர்களின் மகளின் திருமணத்துக்கு செலவு செய்வதாக கேட்டதாகவும், அதன்பிறகு தன்மகள் அமெரிக்கா சென்றதாகவும், வீட்டுச்செலவுக்கு மாதம் ஆயிரம் டாலராவது கொடுக்க வேண்டுமென்று கூறியதாகவும், தான் அதுகுறித்து கேட்டபோது அப்படித்தான் பணம் கேட்பார்கள் என்றும், 1-ம்எதிரியின் தங்கை மாமனார் 25 லட்சம் பணம் கொடுத்தால் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று கூறியதாகவும்,

ஆனால் பிரச்சனை தீரவில்லை என்றும், 1-ம்எதிரி குடித்துவிட்டு வந்து அடித்ததாகவும், பின் அசா.1 யை இந்தியாவிற்கு அழைத்து வந்து KMCH மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், பின் புகார் கொடுத்ததன்பேரில் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. அசா.4 இளங்கோ தனது சாட்சியத்தில் தான் தெக்கலூர் அரச்சலூர் மாவட்டத்தில் குடியிருந்து வருவதாகவும், அசா.1 தன் அக்காமகள் என்றும், திருமணத்திற்கு 150 பவுன்நகையும், திருமண செலவாக 20 லிருந்து 22 லட்சம் செலவுசெய்து திருமணம் நடந்ததாகவும், திருமணம் முடிந்து 2 மாதங்கள் கோவையில் இருந்து பின் குடித்து விட்டு வநந்து அடிப்பதாகவும் பணம் அவர்களுக்கு தேவைப்படுவதாகவும், தன்பெற்றோரிடம் கேட்டு பணஙம்கொடுக்கும்படியாக கூறியதாகவும், அதன்பின் தானும் அசா.1 ன் தகப்பனாரும் 2-ம்எதிரியை பார்த்து பேசியபோது தான் பேசி பார்ப்பதாக கூறியதாகவும், பின் அசா1 தாக்கப்பட்டதை தொலைபேசியில் தெரிந்துகொண்டதாகவும், பின் 20 லிந்து 25 லட்சம் பணம் கொடுத்தால் பிரச்சனை முடிந்து விடுமென்று கூறியதாகவும், பின் இந்தியா வந்து காவல் நிலையத்தில் அசா.1 புகார் கொடுத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. அசா.5 மகேஸ்வரி தனது சாட்சியத்தில் தான் வெங்கடசாமி லே அவுட் தண்ணீர்பந்தல் கோவை என்ற விலாசத்தில் குடியிருந்து வருவதாகவும், எதிரிகள் தன் வீட்டின் அருகில் தற்போது குடியிருந்து வருகிறார்கள் என்றும், அவர்கள் வீட்டில் என்னபிரச்சனை என்று தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

10. அசா.6 தமிழ்ச்செல்வி தனது சாட்சியத்தில் தான் பீளமேட்டில் குடியிருந்து வருவதாகவும், வேலைக்கு போகவில்லை என்றும், தனக்கு 1-ம்எதிரியின் வீடு தான்தெரியும் என்றும், தனக்கு அடுத்த வீதியில் அவர்கள் குடியிருக்கிறார்கள் என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் கூறி நீதிமன்ற விசாரணையில் அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ளார்.

11. அசா.7 துரைசாமி தனது சாட்சியத்தில் தான் ராமநாதபுரத்தில் குடியிருந்து வருவதாகவும், தான் கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளராக பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், 2-ம் எதிரி தன் நண்பர் தன்னுடன் பணியாற்றியவர் என்றும், 8 ஆண்டுகளுக்கு முன்பு துரைசாமி என்பவர் கனரா வங்கியில் மேனேஜராக பணியாற்றி வந்ததாகவும், அவரது மகள் அசா.1 யை 1-ம் எதிரிக்கு திருமணம் செய்வதற்காக தானும் 2-ம் எதிரியும் பேசி 18.02.2008-ம்தேதி திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்கு முன்பு 1-ம்எதிரி அமெரிக்காவில் வேலை பார்த்து வந்ததால் திருமணத்திற்குபிறகு அமெரிக்கா சென்றதாகவும், 1 மாதம் கழித்து அசா.1 அமெரிக்கா சென்றபோது இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக சொன்னதாகவும், பின் தான் அசா.2 டம் சொல்லி அவர்களை சமாதானமாக போகும்படி சொன்னதாகவும், அசா.1 அமெரிக்காவில் இருக்கும்போது காவல்துறையில் ஒருபுகார் கொடுத்ததாக கேள்விப்பட்டதாகவும், அதன்பின்பு 2008 டிசம்பர் அசா.1 கோவை வந்ததாகவும், பின் இருவரிடமும் சமாதானமாக போகும்படி சொன்னதாகவும், பின் அசா.1 ன் புகாரின் பேரில் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

12 அசா.8 மேகலா தனது சாட்சியத்தில் தான் தற்போது அனைத்து மகளிர் காவல் நிலையம் மேற்கில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், 28.02.2009 தேதி காலை 11.30 மணிக்கு தான் பணியிலிருந்தபோது கிருத்திகா நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று நிலைய கு.எண்.12/2009 இதச பிரிவுகள்498(அ), 4 வரதட்சணை தடுப்புச் சட்டப் பிரிவின்கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்ததாகவும்,பின்மேல் விசாரணைக்காக பி.7 ராமநாதபுரம் ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாகவும்,அவர் தன்னிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அசா.9 கணேசன் தனது சாட்சியத்தில் தான் தற்போது குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை பொள்ளாச்சி காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருவதாகவும், கடந்த 28.03.2009-ம்தேதி தான் பி.7

ராமநாதபுரம் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது அனைத்து மகளிர் காவல் நிலையம் கிழக்கு கு.எண்.12/2009 ச/பி.498(அ), மற்றும் Sec 4 of D.P. Act வழக்கினை உதவி ஆய்வாளர் மேகலா பதிவு செய்ததை புலன் விசாரணைக்காக தனக்கு அனுப்பி வைத்ததாகவும், வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றையதினமே பிற்பகல் 1.30 மணிக்கு சம்பவ இடத்தில் சென்று சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், மேலும் எதிரிகளைப் பிடிக்க தனிப்படை அமைத்து எதிரிகளை பிடித்த துப்பு வைக்கப்பட்டதாகவும், பின் 05.10.2009-ம்தேதி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்ற விவரத்தை தெரிந்து கொண்டு அதன் நகலை பெற்றுக் கொண்டதாகவும், பின் 22.12.09-ம்தேதி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 08.07.2010-ம் தேதி வழக்குக்கோப்பினை மேல் புலன் விசாரணைக்காக ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

14. அசா.10 முனிராபேகம் தனது சாட்சியத்தில் தான் தற்போது காவல்துறையில் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்று விட்டதாகவும், தான் அனைத்து மகளிர் காவல் நிலையம் கிழக்கில் 08.07.10-ம் தேதி ஆய்வாளராக பணியிலிருந்தபோது நிலைய கு.எண்.12/09 ச/பி.498(அ), 4 of D.P. Act வழக்குக்கோப்பை புலன் விசாரணைக்கு பெற்றுக் கொண்டதாகவும், 24.08.10-ம்தேதி வழக்கின் சாட்சிகளை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததாகவும், வழக்கின் சாட்சிகள் அனைவரும் ஏற்கனவே சொன்னதையே தன்னிடமும் சொன்னதால் தான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், எதிரிகள் 3 பேரும் அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் ஏற்கனவே பெற்றுவிட்டதாகவும், வழக்கின் புலன் விசாரணை முடித்து 08.10.10-ம்தேதி 1 முதல் 3 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 498(அ) இதசவின்படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

15. அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து குவிமுச பிரிவு 313(1)(ஆ) படி வனைந்து வினவியபொழுது எதிரிகள் அந்த சாட்சியங்கள் பொய் என்றும் பொய்யான வழக்கு என்றும் தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் எடுத்துரைத்தார்.

16. இவ்வழக்கினில் முடிவு செய்யப்பட வேண்டிய சங்கதி யாதெனில், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு எதிரிகள்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா? என்பதேயாகும்.

**17.** <u>கலந்தாராய்தல் மற்றும் தீர்வு</u> **;**

அரசுத் தரப்பில் எதிரிகளின் மீது இதச பிரிவுகள் 498(A)-ன் கீழ் இந்த வழக்கு பதியப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருமணத்திற்கு பின்னிட்டு புகார்தாரர் கூட்டுக் குடும்பமாக ஒருவார காலம் வாழ்ந்தபோது 2, 3 எதிரிகள் புகார்தாரரை 1-வது எதிரியுடன்பேச விடாமல் அவ்வாறு பேச வேண்டுமென்றால் 2 வது மற்றும் 3 வது எதிரிகளிடம் அனுமதி வாங்க வேண்டுமெனவும், அமெரிக்கா சென்று 1-வது எதிரியுடன் குடும்பம் நடத்த வேண்டுமென்றால் 4000 அமெரிக்க டாலர் கொடுக்க வேண்டுமென்றும், கொடுக்க மறுத்தால் கணவருடன் வாழ முடியாது என்று எதிரிகள் மூவரும் அச்சுறுத்தியதாகவும், எதிரி கிருத்திகா 24.05.2008 ஆம்தேதி நியூயார்க் சென்ற பிறகும் தான் கேட்ட 4000 அமெரிக்க டாலர் வேண்டுமென்றும், வீட்டிற்கு தேவையான அனைத்து சாமான்களையும் சாட்சி 1 தான் வாங்க வேண்டுமென்று சொல்லி எதிரி கொடுமைப் படுத்தியதாகவும், பிறகு நியூயார்க்கில் இருந்தபோது 11.06.2008 அன்று 1-வது எதிரி சாட்சி கிருத்திகாவின் கையை கத்தியால் அறுத்துவிட்டு இந்தியாவிற்கு திரும்ப செல்லும்படி விரட்டிவிட்டு 2 வது மற்றும் 3 வது எதிரிகள் 1-வது எதிரியை தூண்டிவிட்டு 1 வது எதிரி கேட்டதை கொடுக்காவிட்டால் சாட்சி கிருத்திகாவை தூக்கி எறிந்து விடுவான் என்று கூறியதாகவும், 20.11.2008-ஆம் தேதி 1-வது எதிரி வீட்டைவிட்டு கிருத்திகாவை விரட்டி உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் கொடுமைப்படுத்தியதாக எதிரியின்மீது அரசுத்தரப்பில் வழக்கு முன் வைக்கப்பட்டுள்ளது. அரசுத்தரப்பு வழக்கை நிரூபிக்க 10 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு 10 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

18. புகார்தாரருக்கும் முதல் எதிரிக்கும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் 12.02.2008-ம்தேதி கோவை அவினாசிரோடு கோல்டுவின்ஸிலுள்ள ராமலெட்சுமி மஹாலில் வைத்து நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின்போது வாதியின் பெற்றோர்கள் சுமார் 150 பவுன் நகையும் திருமண செலவு ரூ.14 லட்சமும் செலவு செய்து திருமணம் செய்து வைத்ததாக புகார்தாரர் புகாரில் சொல்லியுள்ளார். வரதட்சணைகள் ஏதேனும் எதிரிகள் கேட்டு பெற்றதாகவோ 150 பவுன் நகையும் திருமண செலவு ரூ.14 லட்சமும் எதிரிகள் கேட்டதால் செய்யப்பட்டதாகவோ புகார்தாரர் புகாரில் தெரிவிக்கவில்லை. புகார்தாரரின் பெற்றோர்களான அசா.2, அசா.3-ம் தங்களுடைய சாட்சியங்களில் எதிரிகள் திருமணத்தின்போது நகை பணம் வரதட்சணையாக கேட்டு பெற்றதாகக் கூறவில்லை. எனவே திருமணத்தின்போது செய்யப்பட்டதாக சொல்லப்படும் சுமார் 150 பவுன்நகை ரூ,14 லட்சம் செலவு போன்றவற்றை எதிரிகள் கேட்டுப் பெறவில்லை என்பது அசா.1 ன் புகார் மற்றும் சாட்சியம் மற்றும் அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவருகிறது.

19. திருமணமான காலத்திலிருந்து சுமார் ஒருவார காலம் புகார்தாரர் எதிரிகளுடன் கூட்டுக் குடும்பமாக இருந்து வந்தார் என்பது அரசுத்தரப்பு வழக்கு. 10.03.2008-ல் முதல் எதிரி வேலையின் காரணமாக அமெரிக்கா சென்றுவிட்டார் என்பது அரசுத்தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரிய வருகிறது. மேற்படி கூட்டுக்குடும்பமாக இருந்த ஒருவார காலத்தில் வாதியின் பெற்றோர்கள் வரதட்சணையாக பணமாக கொடுக்கவில்லை என்று 3-வதுஎதிரி வாதிமீது குற்றம் சாட்டி வந்ததாகவும், அதைச்சொல்லி 1, 2 எதிரிகளை தூண்டி விட்டதாகவும், அதற்கு 1-வதுஎதிரி என் பெற்றோர்களை எப்படி சமாளிக்கப் போகிறாய் எனக் கேட்டுக்கொண்டே இருந்ததாகவும், தன் கணவரின் வீட்டில் இருந்தபோது வாதியை தன்கணவருடன் பேசவிடாமல் அவ்வாறு ஏதாவது பேச வேண்டுமென்றால் 2, 3 எதிரிகளின் அனுமதி வாங்க வேண்டுமென்றும் அமெரிக்கா சென்று குடும்பம் நடத்த வேண்டுமெனில் வாதி 4,000 அமெரிக்க டாலர் கொடுக்க வேண்டும் அவ்வாறு கொடுக்க மறுத்தால் எங்கு போனாலும் தன்கணவருடன் வாழ விடமாட்டேன் என்று எதிரிகள் கூறியதாகவும், அதற்கு பயந்து வாதி ஒப்புக்கொண்டதாகவும், புகாரில் சொல்லியுள்ளார். மேற்கண்டவாறான ஒருசம்பவம் புகாரில் நடைபெற்றிருந்ததாக வாதி தெரிவித்திருந்தாலும் நீதிமன்றத்தில் ஆஜராகி அளித்துள்ள சாட்சியத்தில் தன்கணவருடன் பேச வேண்டுமென்றால் அனுமதி கேட்டுதான் பேசவேண்டுமென்று 2, 3 எதிரிகள் கூறியதாகவோ, அமெரிக்காவில் சென்று முதல் எதிரியுடள் வாழ வேண்டுமென்றால் 4000 அமெரிக்க டாலர் கொடுக்க வேண்டுமென்று கூறியதாகவோ சாட்சியம் அளிக்கவில்லை.

WEB COPY

20. அசா.2 ஆன அசா.1 ன் தகப்பனார் தன்னுடைய சாட்சியத்தில் வாதி கூட்டுக் குடும்பமாக இருந்தபோது அவரை தன் கணவருடன்பேச விடாமல் அவ்வாறு எதாவது பேச வேண்டுமென்றால் 2,3 எதிரிகளின் அனுமதி வாங்க வேண்டுமென்றும், அமெரிக்கா சென்று குடும்பம் நடத்த வேண்டுமெனில் வாதி 4000 அமெரிக்க டாலர் கொடுக்க வேண்டுமென்றும், அவ்வாறு கொடுக்க மறுத்தால் எங்கு போனாலும் தன் கணவருடன் வாழ விட மாட்டேன் என்று எதிரிகள் கூறியதாக சாட்சியம் அளிக்கவில்லை. அசா.2 தன்னுடைய சாட்சியத்தில் அமெரிக்கா போவதற்கு முன் 4000 டாலர் கொண்டுபோ அவனிடம் பணம் இல்லை அப்படி கொண்டு போனால் தான் 1-ம் எதிரி தன் மகளுடன் குடும்பம் நடத்துவார் என 3-ம் எதிரி தன் மகளிடம் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியமும் அசா.1 ன் புகாரினை உறுதி செய்யவில்லை. அசா.1 புகாரில் சொல்லியுள்ள சங்கதிக்கு முரண்பட்ட ஒரு சங்கதியும் அசா.2 சாட்சியம் அளித்துள்ளதால் உண்மையில் அவ்வாறு ஒரு சம்பவம் நடந்ததா என்பது சந்தேகத்திற்கு இடமாகவே உள்ளது. மேலும் அசா.1 ம் நீதிமன்றத்தில் ஆஜராகி அளித்துள்ள சாட்சியத்தில் அவ்வாறான ஒரு சம்பவம் நடந்ததாக கூறாதது முற்றிலும் அசா.1 ன்புகாரின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

21. இந்நிலையில் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா.3 ஆன அசா.1 ன் தாயார் அசா.1 ன் புகார் மற்றும் அசா.1, 2 சாட்சிகளின் சாட்சியத்திற்கு முற்றிலும் முரண்பட்டு எதிரிகள் 25 லட்சம் பணம் கொடுத்தால் தான் தன்மகளின் பிரச்சனை தீரும் என்றும், அந்த பணத்தை வைத்துதான் அவர்களின் மகளின் திருமணத்திற்கு செலவு செய்வதாக கேட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். கூட்டுக் குடும்பமாக இருந்த காலத்தில் 25 லட்சம் பணம் கேட்டதாக அசா.1 கூறவில்லை. பாதிக்கப்பட்டதாக கூறப்படும் அசா.1 யே தன்னுடைய சாட்சியத்தில் கூட்டுக் குடும்பமாக இருந்த

ஒருவார காலத்தில் 25 லட்சம் பணம் எதிரிகள் கேட்டதாக கூறாதபோது அசா.3, 25 லட்சம் பணமும் எதிரிகளின் மகளின் திருமண செலவிற்காக கேட்டார்கள் என்று கூறுவது அசா.1 முதல் 3 சாட்சிகளின் சாட்சியத்தின் உண்மைத் தன்மையின்மீது சந்தேகம் எழுகிறது.

22. அசா.1 புகாரில் எதிரிகள் தன்கணவருடன் பேசவிடாமல் கொடுமைப்படுத்தியதாகவும், 4000 அமெரிக்க டாலர் கொடுத்தால்தான் அமெரிக்காவில் சென்று வாழ இயலும் என்று கூறினார்கள் என்று கூறிவிட்டு சாட்சியத்தில் அவ்வாறு கூறாத நிலையிலும் அசா.2 அசா.1ன் புகாருக்கு மாறுபட்ட சங்கதியாக சாட்சியம் அளித்துள்ள நிலையிலும் அசா.3 முற்றிலும் புதிய ஒரு சங்கதியை 25 லட்சம் ரூபாய் பணம் கேட்டார்கள் என்று சாட்சியம் அளித்துள்ள நிலையிலும் உண்மையில் வாதி எதிரிகளுடன் கூட்டுக் குடும்பமாக இருந்த காலத்தில் அசா.1 புகாரில் சொல்லியுள்ளவாறு ஒரு சம்பவம் நடைபெற்றதா என்பதைக் குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஏனெனில் உண்மையில் அவ்வாறான ஒரு சம்பவம் நடந்து இருந்தால் அதுகுறித்து அசா.1 நீதிமன்ற சாட்சியத்தில் சாட்சியம் அளித்திருப்பார். உண்மையான சம்பவத்தில் 2, 3 எதிரிகளும் முரண்பட்டு சாட்சியம் அளித்திருக்க மாட்டார்கள். மேலும் அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா.4 முதல் 7 வரையிலான சாட்சியம் அசா.1 திருமணம் முடிந்து கூட்டுக் குடும்பமாக இருந்த நாட்களில் அமெரிக்கா செல்வதற்கு முன்பு மேற்கண்டவாறான சம்பவம் நடந்துள்ளதைக் குறித்து எந்த சாட்சியமும் அளிக்கவில்லை.

23. அசா.1 குறுக்கு விசாரணையில் 1-வது எதிரி அமெரிக்கா சென்றபிறகு விசா கிடைப்பதற்கு வேண்டி பெங்களூரில் தொடர்ந்து இருந்து வந்ததாகவும், 24.05.2009 வரை பெங்களூரில் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். எ.ம.சா.ஆ.1 ஆவணம் அவ்வாறு பெங்களூரில் இருந்தபோது புகார்தாரரால் புகார்தாரர் திருமணம் செலவாக பெற்றுக்கொண்ட 20 ஆயிரம் டாலர் தொகைக்கு நன்றி தெரிவித்து 17.04.2008 ஆம்தேதி 1-வது எதிரிக்கு அனுப்பப்பட்டதாகவும், அந்த கடிதத்திலிருந்தே முதல் எதிரி தன் திருமண செலவிற்கு பணம் கொடுத்து அசா.1 யை திருமணம் செய்து கொண்டார் என்பது தெரிய வருகிறது என்றும், 4000 அமெரிக்க டாலர் கேட்டு எதிரிகள் வாதியை கொடுமைப்படுத்த வில்லை என்றும் எதிரிகள் தரப்பில் வாதிடப்பட்டது. இந்நிலையில் எ.த.சா.ஆ.1 ஆவணத்தினை ஆராய்கையில் மேற்படி ஆவணம் பேக்ஸ் மூலமாக அசா.1 ஆல் கையெழுத்து இடப்பட்டு 20 ஆயிரம் டாலர் முதல் எதிரி கொடுத்ததற்காக திருமணத்திற்குபின்னிட்டு பெங்களூரில் இருந்த நாட்களில் நன்றி தெரிவித்து புகார்தாரர் அசா.1 ற்கு அந்த கடிதத்தை அனுப்பியுள்ளார் என்பது தெரியவருகிறது.

24. அசா.1 குறுக்கு விசாரணையில் எ.த.சா.ஆ.1-ல் உள்ள கையெழுத்து தன்னுடையது என்பதை ஒப்புக் கொண்டுள்ளார். மேலும் அவர் குறிப்பிட்டுள்ள எண் தேதி time மற்றும் HCL Limited என்று குறிப்பிட்டுள்ளது அனைத்தும் உண்மை என்பதும் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் அதிலுள்ள சங்கதி தான் அனுப்பியது இல்லை என்று குறுக்கு விசாரணையில் கூறுகிறார். பேக்ஸ் மூலமாக அனுப்பப்பட்ட ஒரு காகிதத்தில் புகார் என்பது ஒரு காகிதத்திலும் சங்கதியை தட்டச்சு செய்து அனுப்பஇயலாது. அசா.1 எ.தசாஆ.1-ல் உள்ளதை ஒப்புக் கொண்டுள்ளபோது அவரில் உள்ள சங்கதியை தான் அனுப்பவில்லை என்பதை நிரூபிக்கும் பொருட்டு அசா.1 யை சார்ந்துள்ளது. ஆனால் அசா.1 தரப்பில் அந்த சங்கதி அசா.1 ல் அனுப்பப்படவில்லை என்பதற்கு ஆவண சாட்சியமும் வாய்மொழி சாட்சியமும் அளிக்கப்படவில்லை. எனவே எ.த.சா.ஆ.1 ஆவணம் புகார்தாரரால் முதல் எதிரிக்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதை இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே 20 ஆயிரம் டாலர் தான்பணம் கொடுத்து முதல் எதிரி அசா.1 யை திருமணம் செய்து கொண்டார் என்றும் எதிரிகளால் 4000 அமெரிக்க டாலர் கேட்டு வாதியை கொடுமைப்படுத்தவில்லை என்றும் வாதிடப்பட்டுள்ள எதிரிகள் தரப்பு வாதத்தில் பொருள் உள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

25. எதிர்மனுதாரர் தரப்பில் எ.த.சா.ஆ.3 26.5.2008 தேதியிட்ட அ.த.சா.1 அமெரிக்காவில் இருந்தபோது 2-வது எதிரிக்கு அனுப்பிய ஈமெயில் குறியீடு செய்யப்பட்டு அந்த கடிதத்தை பொருத்தவரை 2-வது எதிரியுடன் அசா.1 நல்லுறவே இருந்துள்ளது என்பதை குறிப்பிடுகிறது என்றும், அவர்களுக்குள் எந்தவிதமான மனஸ்தாபங்களோ கொடுமைகளோ இல்லை என்றும், எதிரித்தரப்பில் வாதிடப்பட்டது. எ.த.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலிக்கையில் அமெரிக்காவில் சென்றபிறகு நலம் விசாரித்து அசா.1 மேற்படி கடிதத்தை 2-வது எதிரி எதிரிக்கு அனுப்பியுள்ளார்.

WEB COPY

அந்த கடிதத்தின் மூலம் எதிரிகளுடன் அசா.1 ற்கு நல்லுறவு இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது. மேலும், அசா.1 குறுக்குவிசாரணையில் Ex.D3 உண்மையில் தன்கணவர் அனுப்பியதாக குறிப்பிடுகிறார். எ.த.சா.ஆ.3 ஈமெயில் அசா.1 ன் ஈமெயிலில் இருந்து அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு அனுப்பப்பட்ட ஒரு ஈமெயில் தனது கணவரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்கும் பொறுப்பு அசா.1 யை சார்ந்ததாகவும். ஆனால் அசா.1 குறிப்பிடும் அந்த ஈமெயில் 1-வது எதிரியால் அனுப்பப்பட்டுள்ளது என்பதற்கு எந்த ஆவணங்களும் சாட்சியங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, எ.த.சா.ஆ.3 புகார்தாரரால் 2, 3 எதிரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்கண்ட ஆவணத்தின் மூலமும் திருமணம்முடிந்து கூட்டுக் குடும்பமாக இருந்த காலத்தில் அசா.1 ற்கும் எதிரிகளுக்கும் நல்லுறவு இருந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

26. திருமணத்திற்குப்பின் இருவரும் கோயமுத்தூர், பீளமேடு, தண்ணீர்பந்தல், வெங்கிடுசாமி லேஅவுட் கதவுஎண் 21-A2 என்றமுகவரியில் கூட்டுக் குடும்பமாக ஒருவாரகாலம் வாழ்ந்து வந்தார்கள். அந்தவீடு குற்றம் சாட்டப்பட்டவருக்கு சொந்தமானதாகும். அவர்கள்இருவரும் அங்கு வாழ்ந்த காலத்தில் குற்றம் சாட்டப்பட்ட 2 மற்றும் 3-ம் நபர்கள் கிருத்திகாவை 1-ம் குற்றம் சாட்டப்பட்டவருடன் பேசவேண்டும் என்றால் தங்களிடம் அனுமதி வாங்க வேண்டும்என்றும், அமெரிக்கா சென்று 1-ம்குற்றம் சாட்டப்பட்டவருடன் குடும்பம் நடத்த வேண்டும் என்றால் 4000 அமெரிக்க டாலர் வேண்டும் என்றும், கொடுக்க மறுத்தால் கணவருடன் வாழ முடியாது என்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மூவரும் அச்சுறுத்தினார்கள். புகார்தாரர் கிருத்திகா 24.05.2008 அன்று நியூயார்க் சென்றார் என்பது மட்டுமே அரசுத்தரப்பில் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டில் இந்தியாவில் நடந்த குற்றச்சாட்டுகள். பின்னிட்ட குற்றச்சாட்டுகள் அமெரிக்காவில் நடந்தவை.

WEB COPY

27. அசா.8 தனது குறுக்கு விசாரணையில் புகாரில் சொல்லப்பட்டுள்ள விசயங்கள் அமெரிக்காவில் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் என்றும், புகாரில் சொல்லப்பட்டுள்ள விசயங்கள் அமெரிக்காவில் நடந்துள்ளதால் எங்களுக்கு விசாரிக்க அதிகாரம் இல்லை என்று மறுத்து அனுப்பவில்லை என்றும், ஏனெனில் சமூகநல அலுவலர் அறிக்கையின்படி பதிவுசெய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது என்றும் கூறியுள்ளார்.

28. அசா.10 தனது குறுக்கு விசாரணையில் அமெரிக்காவில் நடக்கும் விசயங்களை விசாரிப்பதற்கு முறையான அதிகாரம் இந்த வழக்கில் பெறவில்லை என்றால் சரிதான் என்றும், அது சம்பந்தமாக வாதியைத் தவிர வேறு சாட்சியை நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான் என்றும் அதற்கு இடைப்பட்ட காலங்கள் சம்பவங்கள் அனைத்தும் அமெரிக்காவில் நடந்த சம்பவங்கள் என்றால் சரிதான் என்றும், எனவே மேற்கண்ட புலன் விசாரணை அதிகாரிகளின் சாட்சியத்தில் இருந்தும் பின்னிட்ட சம்பவங்கள் அமெரிக்காவில் நடந்தவை என்பதை அறியப்படுகிறது.

29. Sec.188 of Cr.P.C. reads as follows:

When an offence is committed outside India

a) by a citizen of India, whether on the high seas or elsewhere: or

b) by a person, not being such citizen, on any ship or aircraft registered in India,

he may be dealt with in respect of such offence as if it had been committed at any place within India at which he may be found:

Provided that, notwithstanding anything in any of the preceding sections of this Chapter. No such offence shall be inquired into or tried i India except with the previous sanction of the Central Government.

30. Accordingly, upto the stage of taking cognizance, no previous sanction would be required from the Central Government in terms of the provision to Section 188 Cr.P.C. However, the trial cannot proceed beyond the cognizance stage without the previous sanction

of the Central Government. The Magistrate is, therefore, free to proceed against the accused in respect of offences having been committed in India and to complete the trial and pass judgment therein, without being inhibited by the other alleged offences for which sanction would be required.

31. திருமணத்திற்குப்பின் இருவரும் கோயமுத்தூர், பீளமேடு, தண்ணீர்பந்தல், வெங்கிடுசாமி லேஅவுட் கதவு எண் 21-A2 என்ற முகவரியில் கூட்டுக் குடும்பமாக ஒருவார காலம் வாழ்ந்து வந்தார்கள். அந்தவீடு குற்றம் சாட்டப்பட்டவருக்கு சொந்தமானதாகும், அவர்கள் இருவரும் அங்கு வாழ்ந்த காலத்தில் குற்றம் சாட்டப்பட்ட 2 மற்றும் 3-ம் நபர்கள் கிருத்திகாவை 1-ம் குற்றம் சாட்டப்பட்டவருடன் பேச வேண்டும் என்றால் தங்களிடம் அனுமதி வாங்க வேண்டும் என்றும், அமெரிக்கா சென்று 1-ம் குற்றம் சாட்டப்பட்டவருடன் குடும்பம் நடத்த வேண்டும் என்றால் 4000 அமெரிக்க டாலர் வேண்டும் என்றும், கொடுக்க மறுத்தால் கணவருடன் வாழ முடியாது என்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மூவரும் அச்சுறுத்தினார்கள். புகார்தாரர் கிருத்திகா 24.05.2008 அன்று நியூயார்க் சென்றார் என்று மட்டுமே உள்ளது. இதில் சட்ட விரோதமாக எதுவும் இல்லை. அமெரிக்கா சென்றால் குடும்பம் நடத்தினால் வீட்டு செலவிற்காக 4000 டாலர் என்று கேட்டதாக சொல்வது சட்ட விரோதமான வேண்டுதல் ஆகாது. மேலும் 2 அல்லது 3 எதிரிகளால் யார் எப்போது கேட்டார்கள் என்றும் இல்லை. முதல் விசாரணையில் அ.த.சா.1 சொல்லியிருக்கின்ற விசயங்கள் வழக்கின் குற்றச்சாட்டுக்கு சம்பந்தம் இல்லாத புதிய விசயங்கள் ஆகும்.

32. திருமணத்திற்குப்பின் நாங்கள் எங்கள் வீட்டில் தங்கியிருந்தோம். அதன்பின் ஒருநாள் கோவிலுக்கு போய்விட்டு என் மாமியார் வீட்டுக்கு போய்விட்டோம், எதிரிகள் வீட்டில் அப்போது எதிரிகளைத்தவிர 1-ம் எதிரியின் தங்கை, தங்கையின் குழந்தை ஆகியோர் இருந்தார்கள். எதிரிகள் வீட்டில் நான் இருந்தபோது என்னுடன் யாரும் சரியாக பேசியதில்லை. 1-ம் எதிரியும் 2-ம் எதிரியும் தனியாக போய்விடுவார்கள். 3-ம் எதிரியும் அவரது மகளும் தனியாக வேறு ஒரு அறையில் இருப்பார்கள். நான் தனியாகத்தான் இருப்பேன். 1-ம் எதிரி அவர் அப்பாவுடன் தனியாக நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு என்னிடம் வந்தவுடன் என் அப்பா கல்யாணத்தை சரியாக நடத்தவில்லை என சொல்லி கோபப்படுவார். 3-ம் எதிரி என் அப்பா திருமணத்தின்போது நகைகள் மட்டும் போட்டு அனுப்பிவிட்டார் என்றும், ரொக்கமாக கொடுக்கவில்லை என்றும், வேறொரு இடத்தில் திருமணம் செய்திருந்தால் ரொக்கமாக பணம் கொடுத்திருப்பார்கள் என்றும் சொன்னார் என்று மட்டுமே கூறியுள்ளார்.

33. அ.த.சா.1 அமெரிக்கா சென்றபின் ஆஸ்திரேலியாவில் இருந்த தனது மாமனார் பி.முத்துசாமி எ.த.சா.2 க்கு தான் நலமாக வந்து சேர்ந்தது பற்றி எழுதிய ஈமெயில் கடிதம். அந்த கடிதத்தை பொறுத்தவரை இந்த ஈமெயில் கடிதம் முழுக்க முழுக்க 2-ம் எதிரியுடன் அதசா.1 க்கு நல்லுறவே இருந்துள்ளது என்பதை காட்டுகிறது.

34. இதுபற்றி அதசா.1 தனது குறுக்கு விசாரணையில் நான் யாகூவில் தான் ஈமெயில் வைத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் இந்த யாகூ ஈமெயில் நான் அனுப்பியதா என்று சொன்னால் இது என்னுடைய மெயில் கணக்கு தான். இதை என் எணவர் அப்போது ஆஸ்திரேலியாவில் இருந்ததால் அப்போது அனுப்பியது. நான் இந்த மெயிலை அனுப்பிட்டு தற்போது வழக்கிற்காக முற்றிலும் மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகள் அந்த காலத்திலும் எவ்வித தொந்தரவும் செய்யவில்லை என்றும், அதனால்தான் இது போன்ற ஒரு ஈமெயில் என் மாமனாருக்கு அனுப்பியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதன் முதலாக அமெரிக்கா சென்று இறங்கிய பிறகு 1-ம் எதிரி என்னை சரியாக அழைத்துச் செல்லவில்லை என்றும் சொல்லியிருப்பது பொய் என்றும், அவர் நல்ல நிலையில் என்னை அவருடன் நன்றாக இருந்த காரணத்தால் தான் நான் இதுபோன்ற ஈமெயில் அனுப்பினேன் என்றும், சந்தோசமாக நான் இருந்தேன் என்றும் சொன்னால் சரியல்ல என்று கூறியுள்ளார்.

35. எனவே மேற்கண்ட பரிசீலனைகளின்படி அரசுத்தரப்பில் எதிரிமீது இந்தியாவில் நடந்ததாக சொல்லப்படும்

WEB COPY

குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகள் குற்றம் அற்றவர்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

36. எதிரிகளை இதச பிரிவு 498(A)-ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்துள்ளதால் அவர்களை குவிமுச 248(1) ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 30.12.2015 அன்று அவையறியப் பகரப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.

<u>இணைப்புகள்:</u>
<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:</u>
அசா.1 . கிருத்திகா (வாதி)
அசா.2 . துரைசாமி
அசா.3 . கலைச்செல்வி
அசா.4 . இளங்கோ
அசா.5 . மகேஸ்வரி
அசா.6 . தமிழ்ச்செல்வி
அசா.7 . துரைசாமி
அசா.8 . மேகலா
அசா.9 . கணேசன்
அசா.10 . முனிராபேகம்

WEB COPY

<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:</u>
அ.த.சா.ஆ.1 . புகார்
அ.த.சா.ஆ.2 . அமெரிக்காவில் 911 என்ற எண்ணுக்கு அழைக்க கொடுக்கப்பட்ட ரசீது.
அ.த.சா.ஆ.3 . USA Wood Bridge Municipal Court-ல் கொடுக்கப்பட்ட உத்தரவு நகல்
அ.த.சா.ஆ.4 . Hotel-லில் கொடுக்கப்பட்டரசீது
அ.த.சா.ஆ.5 . 6.1.2009 தேதி New Jercy Court-க்கு அனுப்பிய கடிதம்
அ.த.சா.ஆ.6 . கார்பன் நகல்
அ.த.சா.ஆ.7 . 25.11.2008 முதல் 11.12.2008 வரையிலான கணக்குப்பட்டியல்
அ.த.சா.ஆ.8 . அசல் பாஸ்போர்ட்டின் ஒளிநகல்
அ.த.சா.ஆ.9 . கடிதம்
அ.த.சா.ஆ.10 . முதல் தகவல்அறிக்கை.

<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>
எ.த.சா.ஆ.1 - கடிதத்திலுள்ள அசா.1 ன் கையொப்பம்
எ.த.சா.ஆ.2 - 11.01.2008 தேதியிட்ட கையொப்பம்
எ.த.சா.ஆ.3 - ஈமெயில் நகல்

<u>குறிப்பு :</u>
1. எதிரி பிணையில் இருந்தார்.
2. எதிரி விடுவிக்கப்பட்டார்.
3. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
கோயம்புத்தூர்.